---

**மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்**
**S.C.O.P. No. 328 of 2025**

மறைந்தவர்: திருமதி கிரிஜா, வேலு அவர்கள் மனைவி

1. திருமதி.லலிதா, திரு.திருவேங்கடம் அவர்களின் மனைவி, பிளாட் எண்.15, வீட்டு எண்.2, தேவி நகர், அயப்பாக்கம், சென்னை – 600 077.
2. திருமதி.மோகனசுந்தரி, திரு. உதயகுமார் அவர்களின் மனைவி, பிளாட் எண்.15, வீட்டு எண்.2, தேவி நகர், அயப்பாக்கம், சென்னை–600 077.
3. திரு.ராஜேந்திரன், திரு.பார்த்தசாரதி அவர்களின் மகன், எண்.48, பாலாஜி நகர் மெயின் ரோடு, குருஸ்தலம், குருபகவான் கோயில் அருகில், அயப்பாக்கம், சென்னை – 600 077.

...மனுதாரர்கள்

மேற்கண்ட விண்ணப்பதாரர்கள் இந்திய வாரிசுச் சட்டம், 1925 (Indian Succession Act, 1925) சட்டத்தின் பிரிவு 372ன் கீழ் மனு தாக்கல் செய்து, மறைந்த திருமதி கிரிஜா அவர்களின் பெயரில் உள்ள சொத்த்துக்களை மாற்றம் செய்ய வாரிசுச் சான்றிதழ் (Succession Certificate) வழங்குமாறு கோரியுள்ளனர். இந்த மனு 09.12.2025 அன்று விசாரணைக்கு வரவுள்ளது. மேற்கண்ட மனுவிற்கு யாவரனும் எதிர்ப்பு தெரிவித்தால், அவர்கள் தாமாகவே அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாக மேலே குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தில் 09.12.2025 காலை 10.00 மணிக்கு வருகை தந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். எதிர்ப்பு தெரிவிக்காதவர்களிடமிருந்து எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாமல், நீதிமன்றம் சட்டப்படி தீர்மானம் மேற்சகாள்ளும்.

**மனுதாரர்களின் வழக்குரைஞர் :**
**டி. செந்தில் குமார், எண். 2/553, மூகாம்பிகை அவென்யூ, பி.ஹச். ரோடு, திருநின்றவூர் – 602 024.**
**செல்: 98404 5414**

---

## RADIANT CASH MANAGEMENT SERVICES LIMITED
**CIN: L74999TN2005PLC055748**

**பதிவு அலுவலகம்** : 28, விஜயராகவா ரோடு, தி.நகர், சென்னை- 600 017, தமிழ்நாடு.
**தொலைபேசி** : 91- 44 – 4904 4904. **மின்னஞ்சல்:** investorrelations@radiantcashlogistics.com
**இணையதளம்** : https://radiantcashservices.com

செப்டம்பர் 30, 2025-ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

நவம்பர் 06, 2025 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் கூட்டத்தில், செப்டம்பர் 30, 2025 உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு அங்கீகரித்துள்ளது. தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிபாய்வு அறிக்கையுடன் கூடிய மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் நிறுவனத்தின் இணையதளமான **https://www.radiantcashservices.com/financials-2025-26/**-ல் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் அதைப் பார்க்கலாம்.

இயக்குனர்கள் குழு உத்தரவுப்படி
Radiant Cash Management Services Limited-க்காக

ஒப்பம்
இடம் : சென்னை — **Col. டேவிட் தேவசகாயம்**
தேதி : நவம்பர் 06, 2025 — **தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்**

**குறிப்பு** : மேற்கண்ட தகவல்கள் SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015-ன் விதிமுறை 33 மற்றும் விதிமுறை 47(1)-ன் படி உள்ளது.

---

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர், தாம்பரம்**
**ந.க.எண்.4521/2025/அ4,**
**நாள் 03.10.2025**

**திரு. K.C.M. அருணாச்சலம்,**
த/பெ. மாணிக்கம், நெ.9. அன்னை தெரசா தெரு, விரிவு ஓம்சக்தி நகர், நெமிலிச்சேரி, குரோம்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம்.

...மனுதாரர்

என் தாயார் **திருமதி. M . செல்லம்மாள்,** க/பெ. மாணிக்கம், 4/A, அமராவதி தெரு, மேற்கு தெரு, முத்துசாமி நகர் மெயின் ரோடு, நெமிலிச்சேரி, குரோம்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் கோட்டம், சென்னை 600044 என்ற விலாசத்தில் **21.12.2023 தேதியில்** இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய தவறியதால் தற்போது மேற்படி இறப்பினை பதிவு செய்து கொள்ளுமாறு எதிர் மனுதாரருக்கு தாக்கல் செய்துள்ள உத்தரவிடக் கோரி மனுவின் பேரில் எவருக் கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்கள் ஆட்சேபனையை வரும் **15 நாட்களுக்குள்** மேற்படி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்தில் நேரில் அல்லது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகித் தெரிவித்து கொள்ள லாம் என்று அறிவிக்கப்படுகிறது.

**திரு. K.C.M. அருணாச்சலம்**
**மனுதாரர், Ph: 9042063331**

---

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT SHOLINGANALLUR**
**O.S.No. 666 of 2024**

Srimathi Kumaraswamy, … Plaintiff

-Vs-

J. Mohan Dass and Another, … Defendants

To.
1. Mr. J. MohanDass,
S/o. K. Jayaraman,
No. 2/126, Nehru Nagar,
Chemmenchery Thoopu,
Chennai – 600 119.
2. Mr. Jayaraman
No. 2/126, Nehru Nagar,
Chemmenchery Thoopu,
Chennai – 600 119.

Please take notice that the above suit was filed for bare injunction and the same was numbered as O.S.No 666 of 2024. In the said circumstances, this Hon'ble Court was pleased to order Notice to you on 29/10/2025 returnable by 09-12-2025.

You may therefore appear before the Hon'ble Court on 09-12-2025 at 10.30 a.m. in person or through pleader, otherwise the matter will be decided in your absence.

**P. Selvaraj,**
**Counsel for Plaintiff.**

---

### பொது அறிவிப்பு
(நியமனதாரர் தகவல்)

இதன் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கதவு எண்.F2, எண் 148, 6வது தெரு, மாருதி நகர், மாடம்பாக்கம், தாம்பரம் தாலுகா, செங்கல்பட்டு, தமிழ்நாடு - 600073 என்னும் முகவரியில் வசித்த **Mr.ஜான்சன் D,** S/o.தனபால் அவர்கள் கனரா வங்கி, சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கிளையில் சேமிப்பு வங்கி கணக்கு மற்றும் தங்க கடன் கணக்கு வைத்திருந்தவர், 12.09.2022 அன்று காலமானார்.

மேற்கண்ட தங்கக் கடனைப் பெறும் போது, **Mr.ஜான்சன் D அவர்கள், தன்னுடைய உறவினரான Mrs/Ms.V.பூங்காவனம்** (பிறந்த தேதி: 28.03.1982) அவர்களை நியமனதாரராக (Nominee) குறிப்பிட்டிருந்தார்.

வங்கியின் பல முறை முயற்சிகளின் பிறகும், மேற்கண்ட நியமனதாரரை தொடர்பு கொள்வதோ அல்லது அடையாளம் காண்பதோ முடியவில்லை. இதனால், Mrs/Ms.V.பூங்காவனம் அவர்கள், **இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளில் இருந்து ஏழு (7) நாட்களுக்குள்,** சென்னை-600009-ல் அமைந்துள்ள கனரா வங்கி, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கிளையை அணுகி, தகுந்த அடையாள ஆவணங்களும் தேவையான ஆவணங்களும் சமர்ப்பித்து, அவரது சேமிப்பு கணக்கில் உள்ள இருப்புத் தொகை மற்றும் முடிக்கப்பட்ட தங்கக் கடன் நகைகளைப் பெறுவதற்கான தேவையான செயல்முறைகளை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் நியமனதாரர் பதிலளிக்கத் தவறினால், வங்கி தனது விதிமுறைகள், ஒழுங்குகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் படி, உரிமை கோரப்படாத (unclaimed) கணக்குகளை கையாளும் நடைமுறைகளை மேற்கொள்ளும், மேலும் எந்தவித தனி அறிவிப்பும் வழங்கப்படமாட்டாது.

**கிளை மேலாளர்,**
**கனரா வங்கி,**
இடம் : சென்னை
தேதி : 08.11.2025 — **சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கிளை**

---

II Asst. Judge
IN THE CITY CIVIL COURT AT CHENNAI
O.S.No.2312 of 2018

Logan Prasad Reddy,
Rep. by his Power of
Attorney Agent E. Chitraleka, Plaintiff

Vs

Saravanan and others Defendants

To,
1) Thiru K Babu
S/o. R.A. Krishnan
(Defendant No-3)
2) Thiru Parthasarathy
S/o. R.A. Krishnan
(Defendant No-4)
Both are residing at New No. 13, Old No. 7, East Mada Street, 1st Floor, Aminjikarai, Chennai - 600029

Please take notice that the Plaintiff filed above suit as against you for Permanent Injunction and Recovery for a sum of Rs.1,50,000/- before the Hon'ble II Asst. Judge, City Civil Court, Chennai. The above suit is posted for your appearance before the Hon'ble II Asst. Judge, City Civil Court, Chennai, on 18.11.2025 at 10.30 A.M., by an order dated 28.10.2025.Hence, you are required to appear either in person or through counsel before the Hon'ble II Asst. Judge, City Civil Court, Chennai on 18.11.2025 at 10.30. A.M., without fail, failing which the matter will be heard and decided ex-parte.

A. SANTHANA SINAKARTHAN
Counsel for Plaintiff
264, New Additional Law Chamber,
High Court Campus, Chennai-600 104.
Cell No:9884177405.

---

## RADIANT CASH MANAGEMENT SERVICES LIMITED
(Formerly Radiant Cash Management Services Private Limited)
**CIN: L74999TN2005PLC055748**

**பதிவு அலுவலகம்** : 28, விஜயராகவா ரோட், தி.நகர், சென்னை- 600 017, தமிழ்நாடு. **தொலைபேசி** : 91- 44 – 4904 4904.
**மின்னஞ்சல்:** investorrelations@radiantcashlogistics.com **இணையதளம்** : https://radiantcashservices.com/

### தபால் வாக்கு அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது, நிறுவனங்கள் சட்டம் 2013 சட்டப்பிரிவுகள் 108 மற்றும் 110 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி, MCA சுற்றறிக்கைகள் மற்றும் SEBI-ன் ஒழுங்குமுறை 44 (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015-க்கு இணங்க அஞ்சல் வாக்குப்பதிவு அறிவிப்பில் காணும் தீர்மானங்கள் மீது உறுப்பினர்களின் ஒப்புதல் பெறுவதற்காக அந்த அறிவிப்பு, மின்னணு முறையில், வரம்புத்தேதியான **நவம்பர் 03, 2025 திங்கட்கிழமை (கட்-ஆப் தேதி)** அன்றுள்ளபடி கம்பெனியிடம்/டெபாசிட்டரி பார்ட்டிசிபண்ட் வசம் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு **நவம்பர் 07, 2025 வெள்ளிக்கிழமை** அன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மின்னணு முறையில் வாக்களிப்பதன் மூலம் சிறப்பு தீர்மானம் வாயிலாக பின்வரும் சிறப்பு அலுவல் அஞ்சல் வாக்குப்பதிவு மூலம் உறுப்பினர்களின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது.

| வ.எண். | சிறப்பு அலுவல்கள் | தீர்மானத்தின் வகை |
|---|---|---|
| 1 | நிறுவனத்தின் மெமோராண்டத்தின் (Memorandum) நோக்கங்கள் உட்பிரிவை மாற்றம் செய்வதற்கு | சிறப்புத் தீர்மானம் |

அஞ்சல் வாக்கு அறிவிப்பை உறுப்பினர்கள், கம்பெனியின் இணையதளத்தில் **www.radiantcashservices.com**-லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், மற்றும் பங்கு பரிவர்த்தனை மையங்களில் அதாவது BSE லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் இணையதளங்களான **www.bseindia.com** மற்றும் **www.nseindia.com** மூலம் கிடைக்கும், மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("NSDL") இணையதளத்தில் **www.evoting.nsdl.com** கிடைக்கும். அஞ்சல் வாக்குப்பதிவு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஆய்வு செய்ய மின்னணு முறையில் கிடைக்கபெறும், மற்றும் அந்த ஆவணங்களை ஆய்வு செய்ய விரும்பும் உறுப்பினர்கள் **investorrelations@radiantcashlogistics.com** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

MCA சுற்றறிக்கையின்படி அஞ்சல் வாக்குப்பதிவு அறிவிப்பு, கம்பெனி/டெபாசிட்டரி பார்ட்சிபண்ட் வசம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப்பதிவு செய்துள்ள மற்றும் NSDL மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ("CDSL") நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டபடி உறுப்பினர்கள் பதிவேட்டில் காணும்/ பயனாளர் உரிமையாளர் பட்டியலில்/ பங்குதாரர்கள் பட்டியலில் காணும் பெயர்களையுடைய உறுப்பினர்களுக்கு மட்டும் மின்னணு முறையில் அனுப்பபடுகிறது.

கம்பெனியின் விவகார அமைச்சகத்தினால் அளிக்கப்பட்ட பொருந்துகின்ற சுற்றறிக்கைகள்படி மின்னணு முறையில் (E-வாக்குபதிவு) தங்களது வாக்குகளை பதிவு செய்யும் வசதியை உறுப்பினர்களுக்கு கம்பெனி ஏற்பாடு செய்துள்ளது. வரம்புத்தேதியன்று பங்குதாரர்கள் பதிவேட்டில் காணும் / பயனாளர் உரிமையாளர் பட்டியலில் காணும் பெயர்களுடைய உறுப்பினர்கள் E-வாக்களிக்க அனுமதிக்கப்படும். வரம்புத்தேதியன்று உறுப்பினராக இல்லாதவர்கள், தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே இந்த அறிவிப்பை கருத வேண்டும்.

E-வாக்குப்பதிவு வசதியை கம்பெனி வழங்க நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ('NSDL') நிறுவனத்தின் சேவைக்கு ஏற்பாடு செய்துள்ளது. E-வாக்குப்பதிவு **ஞாயிற்றுக்கிழமை, 09 நவம்பர் 2025** அன்று **காலை 9:00 மணிக்கு (IST)** தொடங்கி **திங்கட்கிழமை 08 டிசம்பர் 2025 மாலை 5:00 மணிக்கு (IST)** முடிவடையும். அதன்பிறகு மின்னணு வாக்களிக்கும் செயல்முறை ஏற்பாடு NSDL- ஆல் நிறுத்தப்பட்டுவிடும். தீர்மானத்தின் மீது ஒரு உறுப்பினர் ஒரு முறை வாக்களித்த பிறகு அதை மாற்ற அவர் அனுமதிக்கப்படமாட்டார். அஞ்சல் வாக்குப்பதிவு அறிவிப்பின் ஒரு பகுதியாக E-வாக்குப்பபதிவு குறித்த அறிவுரைகள் தரப்பட்டுள்ளன.

**தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்திராத உறுப்பினர்கள் பின்வரும் முறையில் பதிவு செய்திடுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.**

(i) பங்குகளை தாள்வடிவில் வைத்துள்ள உறுப்பினர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்திராத/புதுப்பிக்காத பட்சத்தில் அவர்கள் அதனை கம்பெனி மின்னஞ்சல் **investorrelations@radiantcashlogistics.com** -க்கு அனுப்பி பதிவு செய்திடுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

(ii) பங்குகளை மின்னணு வடிவில் வைத்துள்ள மற்றும் டெபாசிட்டரி பார்ட்டிசிபண்ட் வசம் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்திராத உறுப்பினர்கள் தங்களது மின்னணு கணக்கினை பராமரித்துவரும் டெபாசிட்டரி பார்டிசிபன்டை அணுகவும்.

பங்குகளை தாள்வடிவில், மின்னணு முறையில் மற்றும் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாமல் வைத்திருக்கும் உறுப்பினர்களுக்கு மின்னணு-முறையில் வாக்களிக்கும் முறையை தபால் வாக்கு அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

தீர்மானம் அஞ்சல் வாக்குப்பதிவு மூலம் உறுப்பினர்களால் தேவையான பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் வாக்களிப்பதற்கான கடைசிதேதியான **திங்கட்கிழமை 08 டிசம்பர் 2025** அன்று நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். அஞ்சல் வாக்குப்பதிவு முடிவுகள் **புதன்கிழமை, 10 டிசம்பர் 2025** அன்று அல்லது முன்னர் அறிவிக்கப்படும். மேலும் முடிவுகள் கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்படும். கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்கு பரிவர்த்தனை மையங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்படும். முடிவுகள் கம்பெனியின் ஆய்வாளர் அறிக்கையுடன் கம்பெனி இணையதளத்திலும் **www.radiantcashservices.com** மற்றும் NSDL இணையதளத்திலும் **www.evoting.nsdl.com** வெளியிடப்படும்.

E-வாக்களிப்பதில் கலந்துகொள்வது தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது சந்தேகங்கள் உள்ள உறுப்பினர்கள், **www.evoting.nsdl.com-**ல் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் e-வாக்களிப்பு கையேட்டை உதவிப் பிரிவின் கீழ் பார்க்கவும், அல்லது 022 - 4886 7000 மற்றும் 022 - 2499 7000 தொடர்பு கொள்ளவும், அல்லது Ms.பிரஜக்தாப்வாலே அவர்களை **evoting@nsdl.co.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னணு-வாக்களிப்பது குறித்த உங்கள் குறைகளை அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் சரி செய்து கொள்ளலாம்.

**RADIANT CASH MANAGEMENT SERVICES LIMITED-க்காக**
Sd/-
**Col. டேவிட் தேவசகாயம்**
இடம்: சென்னை — **தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்**
தேதி : 07.11.2025 — **(DIN: 02154891)**

---

## பொது அறிவிப்பு

இதனால் யாவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், எனது கட்சிக்காரர் **திரு.Ka.Anandh** தகப்பனார் பெயர் காலஞ்சென்ற திரு.Kanniah Naidu இந்து வயது 59, வீட்டு விலாசம் எண்.42, பாலாஜி நகர் இரண்டாவது தெரு, விருகம்பாக்கம், சென்னை - 600 092, என்ற முகவரியில் வசிக்கும் எனது கட்சிக்காரருக்கு இருங்காட்டுக்கோட்டையில் உள்ள அவருக்கு சொந்தமான சொத்தின் கீழ்க்கண்ட விவரப்படியான அசல் பத்திரங்கள் காணாமல் போய்விட்டது. அதன் விவரம் வருமாறு:

1. **அசல் பத்திரம் எண்.14437/2007 நாள் 12.06.2007**
2. **அசல் பத்திரம் எண்.1264/2012 நாள் 12.12.2011**
3. **அசல் பத்திரம் எண்.1265/2012 நாள் 12.12.2011**

ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது. சர்வே நம்பர் 337, 338, மற்றும் 339 – இருங்காட்டுக்கோட்டை கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்.

யாருக்கேனும் மேற்படி மூன்று பத்திரங்கள் கிடைக்கப்பெற்றால் எனது மேலே உள்ள எனது கட்சிக்காரர் விலாசத்திற்கோ அல்லது கீழே கண்ட எனது அலுவலக முகவரிக்கோ இந்த பொது அறிவிப்பு வெளியிட்ட 7 தினங்களுக்குள் தகவல் தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

P.ஷ்யாம் ரோகித்.
வழக்கறிஞர்.
எண்.19/26, லோகநாதா நகர் 2வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094
செல்: 95006 10787.
E-mail ID – shyamrohith.adv@gmail.com

---

## அசல் சொத்து ஆவணம் காணவில்லை

கதவு எண். 64, அம்பிகா லே–அவுட், நியூ சித்தாப்புதூர். கோயம்புத்தூர் – 641044, என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி. G.இராஜலட்சுமி (ஆதார் எண். 4462 7495 6258) ஆகிய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் சென்னை, தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் (தற்போது கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகம்) 20.02.2019 தேதியன்று பதிவு செய்யப்பட்ட நிலமாமங்கலம் – கூடுவாஞ்சேரி, மலர் அவென்யூவில் உள்ள என் அசையா சொத்தின் மூல ஆவணம் தொலைந்துவிட்டது. யாரேனும் அதனை கண்டுபிடித்தால், எனது 9344458834 / 9159208563 கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி. **G. இராஜலட்சுமி**

கதவு எண். 64, அம்பிகா லே–அவுட், நியூ சித்தாப்புதூர். கோயம்புத்தூர் – 641044

---

## Mahindra HOME FINANCE

**கார்ப்பரேட் அலுவலகம்:** அலகு எண்.203, 2வது தளம், அகஸ்தியா கார்ப்பரேட் பார்க், தீயணைப்பு நிலையம் எதிரில், கமானி சந்திப்பு, குர்லா மேற்கு, மும்பை-400070
**பதிவு அலுவலகம்:** மஹிந்திரா டவர்ஸ், P.K.குர்னி சவ்க், வெர்லி, மும்பை மஹாராஷ்ட்ரா-400 018 CIN - U65922MH2007PLC169791

**பின்வரும் கிளைகள் 07.02.2026 முதல் மூடப்படுதல் மற்றும் இடம் மாற்றப்படுகிறது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது**

**கீழ்க்கண்ட கிளைகள் இடமாற்றத்திற்கான பொது அறிவிப்பு**

| மூடப்படும் கிளையின் முகவரி | இணைக்கப்படும் கிளையின் முகவரி |
|---|---|
| **ஊட்டி** கதவு எண்.116, தரைத்தளம், எட்டினெஸ் ரோடு, நீலகிரி, ஊட்டி, தமிழ்நாடு - 643001 | முதல் தளம், 421J1, எட்டினெஸ் ரோடு, VTC உதகமண்டலம், சார் மாவட்டம்: உதகமண்டலம், நீலகிரி, தமிழ்நாடு - 643001 |
| **தென்காசி** யூனிட் எண்.462/127, முதல் தளம், PSS மல்டிபிளக்ஸ் தியேட்டர் எதிரில், ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, தென்காசி, தமிழ்நாடு- 627811 | முதல் தளம், 266C, கூலக்கடை பஜார், பழைய பேருந்து நிறுத்தம் எதிரில், தென்காசி, தமிழ்நாடு-627811 |
| **பன்ருட்டி:** 5A/31, முதல் தளம், அன்னை இந்திரா காந்தி சாலை, காமராஜ் நகர், பன்ருட்டி, கடலூர், தமிழ்நாடு -607106 | யூனிட் எண்.55, 2வது தளம், அன்னை இந்திரா காந்தி சாலை அருகில், பன்ருட்டி, திருவீரட்டானம், திருமளிகை, தமிழ்நாடு - 607 106 |

**அனைத்து வாடிக்கையாளர்களும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்**

தேதி : 08.11.2025 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மஹிந்திரா ரூரல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

---

**[Pursuant to Rule 30(6) (a) of the Companies (Incorporation) Rules, 2014] Advertisement to be Published in the Newspaper for change of Registered Office of the Company from one State to Another**

Before the Central Government
**Southern Region**

In the matter of the Companies Act, 2013, Section 13(4) of Companies Act, 2013 and Rule 30(6)(a) of the Companies (Incorporation) Rules, 2014 and In the matter of **MERIAD BUSINESS ADVISORY PRIVATE LIMITED,** CIN:U72900TZ2025PTC178676, having its registered office at **No. 11 A, Bunder Garden, 1st Street, Perambur, Chennai, Perambur Purasaivakkam, Tamil Nadu, India, 600011,** ... Petitioner

Notice is hereby given to the general public that the company proposes to make an application to the Central Government under Section 13 of the Companies Act, 2013 seeking confirmation of alteration of the Memorandum of Association of the company, in terms of the special resolution passed at the Extra Ordinary General Meeting held on **31/10/2025**, to enable the company to change its registered office from the State of **Tamil Nadu** to the State of **Telangana**. Any person whose interest is likely to be affected by the proposed change of the registered office of the company may deliver or cause to be delivered or send by registered post his/her objections supported by an affidavit stating the nature of his/her interest and grounds of opposition to the **Regional Director, Southern Region, Ministry of Corporate Affairs, Chennai,** within **fourteen days** from the date of publication of this notice, with a copy to the applicant company, at its registered office mentioned below:

**Meriad Business Advisory Private Limited**, No. 11 A, Bunder Garden, 1st Street, Perambur, Chennai, Perambur Purasaivakkam, Tamil Nadu, India, 600011.

For and on behalf of the Applicant
**Ramesh Krishna Iyer**
Date: 08-11-2025
Place: Chennai

---

**மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை**
CMP.NO.646 OF 2025
In
F.A.NO. 646 OF 2025
Against
RBT/C.C.NO.28 OF 2024
(மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின்கோப்பில், திருவள்ளூர்)

பத்மா கிளினிக் நர்சிங் ஹோம் மற்றும் 2 நபர்கள்
...மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் / எதிர் தரப்பினர்கள் 1,3 & 4

எதிர்

ஸ்ரீ மல்லிசெட்டி விஜயகுமார் மற்றும் 3 நபர்கள்
....எதிர்மனுதாரர்கள் /எதிர்மனுதாரர்கள் புகார்தாரர்கள்

டாக்டர். திருமதி செந்தமிழ் செல்வி மற்றும் 8 நபர்கள்
....513 எதிர்மனுதாரர்கள் /513 எதிர்மனுதாரர்கள்/ 2.512 எதிர் தரப்பினர்கள்

பெறுநர்
1. டாக்டர். திருமதி செந்தமிழ் செல்வி, ஆலோசகர், மகப்பேறு மருத்துவர், பத்மா கிளினிக் மற்றும் நர்சிங் ஹோம், எண்.753, பூந்தமல்லி ஹை ரோடு, சென்னை–600 010.
2. டாக்டர் திரு. ஜார்ஜ் ஈபன், தலைமை நிர்வாக அதிகாரி, அப்பல்லோ மருத்துவமனைகள்
3. டாக்டர் திரு. சத்ய குமார், அப்பல்லோ மருத்துவமனைகள்
4. 09.03.2002 அன்று ஐ.சி.சி.யுவில் கலந்து கொண்ட செவிலியர் காலை படுக்கை எண்.70, பிரதிநிதி, அப்பல்லோ மருத்துவமனைகள்,

மூவரின் முகவரி
அப்பல்லோ மருத்துவமனைகள்
எண்டர்பிரைசஸ் லிமிடெட்,
எண்.22, கிரீம்ஸ் சாலை, சென்னை–600 006.

**பொது அறிவிப்பு**

மாண்புமிகு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை, 13.10.2025 அன்று செய்தித்தாளில் பொது அறிவிப்பு வெளியிட உத்தரவிட்டது. 13.11.2025 அன்று காலை 10.30 மணிக்கு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை, டின்பிளஸ்சி சாலை, பூங்கா நகரம், சென்னை–600 003 என்ற முகவரியில் நேரிலோ அல்லது உங்கள் வழக்கறிஞருடன் ஆஜராகவும், தவரினால் உங்களுக்கு எதிராக ஒரு தலை பட்சமாக தீர்வு அளிக்கப்படும் என்பதை அறியவும்.

**M/S. AAV PARTNERS**
No.74, 76 & 77, III Floors,
Marshalls Road, Egmore, Chennai-600 008
Ph.no.2855553/2855554
Counsel For Petitioners/Appellants

---

**மாநில நுகர்வ ார் குறைதீர் ஆறையம், சென்றன**
CMP.NO. 862 OF 2025
In
F.A.NO. 932 OF 2025
Against
C.C.NO.10 OF 2025
(மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின்கோப்பில், திருவாரூர்)

டாக்டர்.எம்.நடராஜ் மற்றும் ஒருவர்
...மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் / எதிர் தரப்பினர்கள்

எதிர்

டாக்டர் பிரபு, ... எதிர்மனுதாரர் /எதிர்மனுதாரர் /புகார்தாரர்

பெறுநர்
டாக்டர் பிரபு, S/o.சோமுராஜ்,
எண். 3/252, தியாகராஜ நகர்,
விளமல், திருவாரூர்

**பொது அறிவிப்பு**

மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை, 16.10.2025 அன்று செய்தித்தாளில் பொது அறிவிப்பு வெளியிட உத்தரவிட்டது. 17.11.2025 அன்று காலை 10.30 மணிக்கு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை, டின்பிளஸ்சி சாலை, பூங்கா நகரம், சென்றன–600 003 என்ற முகரியில் நேரிலோ அல்லது உங்கள் வழக்கறிஞருடன் ஆஜராகவும், தவறினால் உங்களுக்கு எதிராக ஒரு தலை பட்சமாக தீர்வு அளிக்கப்படும் என்பதை அறியவும்.

**M/s. AAV PARTNERS**
NO.74, 76 & 77, III Floors,
Marshalls Road, Egmore,
Chennai-600 008
Ph.No.2855553/2855554
Counsel For Petitioners/
Appellants/Opposite Parties



## உதயநிதி மிகச் சிறப்பாக செயல்படுகிறார்

# தேர்தல் ஆணையம் மூலம் தி.மு.க.வை வீழ்த்த முயற்சி: ஸ்டாலின் குற்றச்சாட்டு

## எந்த காவியாலும் எங்களை வீழ்த்த முடியாது

சென்னை, நவ.8–

**தி.மு.க.வை வீழ்த்த முடியாது என்பதால் எஸ்.ஐ.ஆர்.ஐ. வைத்து தேர்தல் ஆணையம் மூலம் வீழ்த்த நினைக்கிறார்கள் என்று பாரதீய ஜனதாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எச்சரித்தார்.**

**உதயநிதி மிகச் சிறப்பாக செயல்படுகிறார் என்றும் அவர் கூறினார்.**

தி.மு.க.வின் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கட்சியின் இளைஞர் அணி சார்பில் 'தி.மு.க 75 அறிவுத் திருவிழா' என்னும் நிகழ்ச்சி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை தி.மு.க. தலைவரும், முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து, 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

பின்னர் நிகழ்ச்சியில் பேசிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:–

அறிவை மையப்படுத்திய, அறிவுரையை பரப்பிய கட்சியின் 75 ம் ஆண்டு அறிவுத் திருவிழா இது. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி எனும் குறளைப் போல துணை முதல்மந்திரி உதயநிதியின் செயல்பாடு உள்ளது. தந்தை பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் செய்த பணியை உதயநிதி செய்வதால் பெருமை கொள்கிறேன். சாமானியர்களால் தொடங்கப்பட்டு சாதனைப் படைத்த திமுகவை இன்றும் ஆராய்ச்சி செய்கின்றனர். கட்சியை தொடங்கினோம்; ஆட்சியை பிடித்தோம் என்று ஆட்சிக்கு வரவில்லை. ஒரே சூரியன், ஒரே சந்திரன், ஒரே திமுக. இப்படி ஒரு இயக்கம் இனி தோன்ற முடியாது.

### வரலாறு தெரியாதவர்கள் மிரட்டுகிறார்கள்

இன்னும் சில அறிவிலிகள் திமுகவைப்போல வெற்றி பெறுவோம் என பகல் கனவு காண்கிறார்கள். வரலாறு தெரியாதவர்கள் திமுகவை மிரட்டுகிறார்கள். திமுகவை அழிக்க வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறாது.

திமுக உழைத்த உழைப்பு சாதாரணமானது அல்ல; எத்தனை கூட்டங்கள், தியாகங்கள், துரோகங்கள். படிப்பறிவு இல்லாத கிராமங்களில் முடிதிருத்தும் மையம் கூட மக்களின் சிந்தனை கூடங்களாக மாறியது. 75 ஆண்டு கால வரலாறு, சாதனைகளை 1,120 பக்கங்களில் உருவாக்க முயற்சித்தோருக்கு எனது பாராட்டுகள்.

திராவிட இயக்கத்தை விமர்சிப்பவர்கள் கூட 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' புத்தகத்தில் கட்டுரை எழுதியுள்ளனர்.

ஒரு மாநில கட்சியை அகில இந்திய தலைவர்கள், மாநில தலைவர்கள் புகழ்ந்து எழுதியுள்ளனர். ஒடுக்குமுறையில் இருந்த மக்களை மீட்ட இயக்கம் என அன்புத் தம்பி ராகுல் காந்தி கூறியிருக்கிறார். சமூக நீதிக்காக 75 ஆண்டுகள் போராடிய இயக்கம் என லாலு பிரசாத் யாதவ் பாராட்டியிருக்கிறார். கூட்டாட்சியின் வலிமையான பாரம்பரியம் என சரத்பவார் திமுக குறித்து கூறியிருக்கிறார்.

இந்த சாதனையும், வளர்ச்சியும் மற்றவர்களின் கண்களை உறுத்துகிறது. கருப்பு, சிவப்பு, நீலம் என அனைத்தும் சேர்ந்திருக்கும்போது எந்த காவியாலும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மூலம் திமுகவை வீழ்த்த நினைக்கின்றனர். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை ஏன் அவசரம் அவசரமாக நடத்த வேண்டும்.

### வீழ்த்த முடியாது

தேர்தல் நேரத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளை நடத்துகின்றனர். அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்த்தபோதிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை ஏன் நடத்துகின்றனர். கொள்கை ரீதியாக திமுகவை வீழ்த்த முடியாததால் தேர்தல் கமிஷன் மூலம் வீழ்த்த முயற்சி நடக்கிறது. களத்தில் வேலை செய்யும் திமுகவினர் போலி வாக்காளர் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யாருடைய வாக்குரிமையும் பறிபோகாமல் திமுகவினர் களத்தில் பணியாற்ற வேண்டும்.

இது கூடிக் கலையும் கூட்டமல்ல; காலந்தோறும் கொள்கைகளை கூறும் கூட்டமாக இருக்கிறது. இந்திய ஜனநாயகம், தமிழ்நாட்டை காக்க தொடர்ந்த பயணம் 2026லும் தொடரும். தமிழ்நாடு தலைகுனியாது; தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும். இவ்வாறு அவர் கூறினார்.

# மருதமலையில் 184 அடி உயர முருகன் சிலை அமைக்கும் பணிக்கு இடைக்கால தடை

சென்னை, நவ. 8–

**மருதமலையில் 184 அடி உயர முருகன் சிலை அமைக்கும் பணிக்கு இடைக்கால தடை விதித்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.**

சென்னை ஐகோர்ட்டில், வன விலங்கு ஆர்வலர் எஸ்.முரளிதரன் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், ''மருதமலை முருகன் கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 184 அடி உயரத்துக்கு முருகன் சிலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முறையான அனுமதி எதுவும் பெறவில்லை. அதனால், வனப்பகுதியில் முருகன் சிலை அமைக்க தடை விதிக்கவேண்டும்'' என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை ஐகோர்ட் நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரதசக்கரவர்த்தி ஆகியோர் கொண்ட சிறப்பு டிவிசன் பெஞ்ச் விசாரித்து வருகிறது. இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, ''184 அடி உயர முருகன் சிலை அமைக்க மலை பகுதி பாதுகாப்பு ஆணையத்திடம் தடையில்லா சான்று பெற இதுவரை மருதமலை கோவில் நிர்வாகம் விண்ணப்பம் செய்யவில்லை'' என்று வனத்துறை கூறியிருந்தது.

இந்தநிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்து சமய அறநிலையத்துறை சார்பில், ''மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மருதமலை முருகன் கோவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. இந்த கோவிலில் பாம்பாட்டி சித்தர் வழிப்பட்டுள்ளார். இந்த கோவிலில் நன்கொடையாளர்கள் மூலம் 184 அடி உயர முருகன் சிலை, ரூ.110 கோடி செலவில் அமைப்பது என்று தீர்மானம் இயற்றப்பட்டது. இந்த தொகையில் சிலை மட்டுமல்லாமல், வாகன நிறுத்தம், அருங்காட்சியகம், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் பக்தர்களுக்கு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

### விதிகளை பின்பற்றுவார்களா?

முதலில் தேர்வு செய்த இடம் போலம்பட்டி வனப்பகுதியில் இருந்து 55 மீட்டர் தூரத்தில் உள்ளதால், தற்போது போலம்பட்டி வனப்பகுதியில் இருந்து 137 மீட்டர் தூரத்தில் முருகன் சிலையை அமைக்க முடிவு செய்துள்ளோம். இது யானை வழித்தடங்களிலும் வராது. மேலும், வன விலங்குகளுக்கும், பக்தர்களுக்கும் பாதிப்பு ஏற்படாது'' என்று கூறப்பட்டது. இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், வனப்பகுதியில் இருந்து 137 மீட்டர் என்பது மிக அருகில் உள்ள இடமாகும். இதனால், வனத்துக்கும், வன விலங்குகளுக்கும், பக்தர்களுக்கும் கடும் பாதிப்பு ஏற்படும்'' என்றனர். பின்னர் நீதிபதிகள் கூறுகையில், "மலேசியாவில் இதுபோல மிகப்பெரிய முருகன் சிலை அமைக்கப்பட்டாலும், அங்கு விதிகளைதீவிரமாக பின்பற்றுவார்கள். அதுபோல நாம் எதிர்பார்க்க முடியாது.

### கணக்கெடுங்கள்

மருதமலை முருகன் கோவிலில் மிகப்பெரிய சிலை அமைப்பதற்கு முன்பு, நாள் ஒன்றுக்கு எத்தனை பக்தர்கள் வருவார்கள்? அவர்கள் வரும் வாகனங்களை எங்கு நிறுத்துவார்கள்? அதற்கு போதிய இடவசதி உள்ளதா? கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எங்கு அமைப்பீர்கள்? போன்ற அடிப்படை விஷயங்கள் குறித்து ஆய்வுகளை செய்யவேண்டும். அதுமட்டுமல்ல, பெரிய கோவில்களில் நாள் ஒன்றுக்கு அதிகளவில் குப்பை கழிவுகள் வெளியேற்றப்படுகிறது. இதற்கெல்லாம் சேர்த்து முருகன் சிலை அமைக்க சுமார் 100 ஏக்கர் நிலம் தேவைப்படும். வனப்பகுதிக்கு அருகில் சிறிய இடத்தில் சிலை அமைத்தால், பக்தர்கள் அதிகளவில் வந்து கூட்ட நெரிசல் ஏற்பட்டு, அசம்பாவித சம்பவம் நடந்து விடக்கூடாது. மனிதர்கள் வனவிலங்குகள் மோதல் சம்பவமும் நடந்து விடக்கூடாது. முதலில் சிலை அமைக்க தகுந்த இடத்தை தேர்வு செய்யவேண்டும். பக்தர்களும், வாகனங்களும் எளிதில் வந்து செல்ல நல்ல அகலமான பாதை வேண்டும்.

இந்த திட்டத்தினால் எந்த வகையிலும் வனப்பகுதிக்கு பாதிப்பு வரக்கூடாது. எனவே, இதுபோன்ற அடிப்படை ஆய்வுகளை மேற்கொள்ளும் வரை 184 அடி உயர முருகன் சிலை அமைக்கும் பணி எதையும் மேற்கொள்ளக்கூடாது" என்று அவர்கள் கூறினர். பின்னர், முருகன் சிலை அமைக்கும் திட்டம் குறித்து நிபுணர்களை அமைத்து ஆய்வுகள் செய்து அறிக்கை தாக்கல் செய்யவேண்டும். அதுவரை சிலை அமைக்கும் பணியை மேற்கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டு, விசாரணையை வருகிற டிசம்பர் 5ந்தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# மாலியில் இந்தியர்கள் 5 பேர் கடத்தல்

பமாகோ, நவ. 8–

மாலி நாட்டில் தங்கி வேலை செய்து வந்த இந்தியர்கள் 5 பேர் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு ஆப்ரிக்க நாடான மாலியில் ராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. வறுமையில் சிக்கித் தவிக்கும் இந்த நாட்டில் அல் கொய்தா மற்றும் முஸ்லிம் அமைப்புகளுடன் இணைக்கப்பட்ட ஜிஹாதி குழுக்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றன. 2012ம் ஆண்டு முதல் ஏற்பட்டு வரும் மோதல் மற்றும் வன்முறை காரணமாக இங்கு வெளிநாட்டவர்களை கடத்துவது வழக்கமான ஒன்றாக மாறியுள்ளது.

இந்த நிலையில் கோப்ரி பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்த 5 இந்தியர்களை ஆயுதம் ஏந்தி வந்த கும்பல் ஒன்று கடத்திச் சென்றுள்ளது. இதனை அந்நிறுவனத்தின் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். மேலும் அதே நிறுவனத்தில் பணியாற்றி வரும் பிற இந்தியர்களை பமாகோ நகருக்கு இடமாற்றம் செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கடத்தல் சம்பவத்திற்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை. கடந்த செப்டம்பர் மாதம் தலைநகர் பமாகோவுக்கு அருகே ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டைச் சேர்ந்த இருவர், ஈரானைச் சேர்ந்த ஒருவர் என 3 பேரை ஜிகாதிகள் கடத்திச் சென்றனர். பிறகு 50 மில்லியன் டாலர் மீட்பு தொகையாகச் செலுத்தியதால் அவர்கள் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# டென்னெகோ கிளீன் ஏர் இந்தியா பங்குகள் 12ந்தேதி வெளியீடு: தலைவர் ரிஷிவர்மா அறிவிப்பு

மும்பை, நவ. 8–

டென்னெகோ கிளீன் ஏர் இந்தியா லிமிடெட், அதன் ஈக்விட்டி பங்குகளின் ஆரம்ப பொது வழங்கலுடன் தொடர்புடைய ஏலம்/சலுகையை வரும் புதன்கிழமை (12ந் தேதி) திறக்கிறது. இது, வெள்ளிக்கிழமை (14ந் தேதி) முடிவடையும். ஒரு ஈக்குவிட்டி பங்கின் விலை ரூ.378 முதல் ரூ.397 வரை என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் 37 ஈக்விட்டி பங்குகளுக்கும் அதன் பிறகு 37 ஈக்விட்டி பங்குகளின் மடங்குகளுக்கும் ஏலம் எடுக்கலாம்.

ஒரு பங்கிற்கு ரூ.10 முக மதிப்புள்ள ஈக்விட்டி பங்குகளின் ஆரம்ப பொது வழங்கல் ("மொத்த சலுகை அளவு") டென்னெகோ மொரிஷியஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (ப்ரோமோட்டர் விற்பனை பங்குதாரர்") ரூ.3,600 கோடி வரை விற்பனையை உள்ளடக்கியது.

இந்த ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம் வழங்கப்படும் ஈக்விட்டி பங்குகள் பிஎஸ்இ லிமிடெட் ("பிஎஸ்இ") மற்றும் தேசிய பங்குச் சந்தை ("என்எஸ்இ") ஆகிய பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட முன்மொழியப்பட்டுள்ளன.

பட்டியலிடுவதன் நன்மைகளை அடைவதே ஆரம்ப பொது வழங்கலின் நோக்கம் என்று ஆவணங்கள் கூறுகின்றன. டென்னெகோ மொரிஷியஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட், டென்னெகோ (மொரிஷியஸ்) லிமிடெட், ஃபெடரல் மொகுல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி.வி., ஃபெடரல்மொகுல் பிரைவேட் லிமிடெட் மற்றும் டென்னெகோ எல்எல்சி ஆகியவை நிறுவனத்தின் ப்ரோமோட்டர்கள்.

ஜேஎம் ஃபைனான்சியல் லிமிடெட், சிட்டிகுரூப் குளோபல் மார்க்கெட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஆக்சிஸ் கேபிடல் லிமிடெட் மற்றும் எச்எஸ்பிசி செக்யூரிட்டீஸ் அண்ட் கேபிடல் மார்க்கெட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் ஆகியவை இந்த சலுகையின் புத்தக ரன்னிங்லீட் மேலாளர்கள். ("பிஆர்எல்எம்கள்")



ரிஷி வர்மா, தலைவர் (டென்னிகோ கிளீன் ஏர் இந்தியா லிமிடெட்), அரவிந்த் சந்திரசேகரன், (முழுநேர இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி), மகேந்தர் சாப்ரா (தலைமை நிதி அதிகாரி, டென்னிகோ குழுமம்) தீபக் கார்க் ஆகியோர் பங்குகள் வெளியீடு பற்றி அறிவித்தனர்.

### அமெரிக்காவை தலைமையிடமாக...

டென்னெகோ கிளீன் ஏர் இந்தியா, அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட ஆட்டோமொடிவ் பாகங்கள் சப்ளையரான டென்னெகோ குழுமத்தின் ஒரு பகுதியாகும். இது இந்திய OEMகள் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு ஏற்றவாறு முக்கியமான, மிகவும் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சுத்தமான காற்று, பவர்டிரெய்ன் மற்றும் சஸ்பென்ஷன் தீர்வுகளை தயாரித்து வழங்குகிறது.

### ரூ.167 கோடி லாபம்

டென்னெகோ கிளீன் ஏர், ஜூன் மாதத்தோடு முடிவடைந்த காலாண்டில் ரூ.167.8 கோடி லாபத்தைப் பதிவு செய்தது, இது முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்தில் ரூ.150 கோடியிலிருந்து 12% அதிகரிப்பை பிரதிபலிக்கிறது. அதே காலகட்டத்தில், வருவாய் 1.2% அதிகரித்து ரூ.1,285.6 கோடியாக உயர்ந்துள்ளது, இது ரூ.1,270.8 கோடியிலிருந்து அதிகரித்துள்ளது.

# கவர்னர் தேர்தலில் விவேக் ராமசாமி போட்டி: அதிபர் டிரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், நவ. 8–

**குடியரசு கட்சியை சேர்ந்தவரும், இந்திய வம்சாவளி தொழிலதிபருமான விவேக் ராமசாமி, ஓஹியோ மாநிலத்தின் கவர்னர் தேர்தலில் போட்டியிடுகிறார் என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் ஓஹியோ மாநிலத்தின் அடுத்த கவர்னரை தேர்ந்தெடுப்பதற்காக 2026ம் ஆண்டு நவம்பர் 3ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. தற்போதைய குடியரசுக் கட்சி கவர்னர் மைக் டிவைன் பதவிக்காலம் 2வது முறையாக முடிவடைய உள்ளது. அவர் தொடர்ந்து 3வது முறையாக போட்டியிட தகுதியற்றவர்.

தேர்தலில் வெற்றி பெறுபவர் ஜனவரி 11ம் தேதி, 2027ம் ஆண்டு பதவியேற்பார். அமெரிக்காவின் வழக்கத்தின் படி தேர்தலுக்கு ஓராண்டுக்கு முன்னதாகவே வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படும்.

சமூக வலைதளத்தில் டிரம்ப் வெளியிட்டுள்ள பதிவில், ஓஹியோ மாநிலத்தின் கவர்னராக விவேக் ராமசாமி போட்டியிடுகிறார். விவேக்கை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் திறமை வாய்ந்தவர். அவர் இளம் தலைமுறை மற்றும் மிகவும் புத்திசாலி என்று கூறியுள்ளார்.

விவேக் ராமசாமி ஒரு நல்ல மனிதர், அவர் நம் நாட்டை உண்மையிலேயே நேசிக்கிறார். உங்கள் அடுத்த கவர்னராக விவேக் ராமசாமி பொருளாதாரத்தை வளர்க்கவும், வரிகள் மற்றும் விதிமுறைகளைக் குறைக்கவும், புலம் பெயர்ந்தோர் குற்றங்களை நிறுத்தவும், நமது ராணுவத்தை வலுப்படுத்தவும், சட்டம் ஒழுங்கை உறுதி செய்யவும் அயராது போராடுவார். விவேக் ராமசாமி ஓஹியோவின் சிறந்த கவர்னராக இருப்பார். மேலும் எனது முழுமையான ஒப்புதலைப் பெறுவார். அவர் உங்களை ஒருபோதும் ஏமாற்ற மாட்டார் என்றும் டிரம்ப் கூறியுள்ளார்.

# திருச்செந்தூர் கடற்கரையில் இரவு நேரத்தில் பக்தர்கள் தங்குவதற்கு போலீசார் தடை

திருச்செந்தூர், நவ. 8–

**திருட்டு சம்பவங்கள் நடைபெறுவதால் திருச்செந்தூர் கடற்கரையில் இரவு நேரத்தில் தங்குவதற்கு போலீசார் தடை விதித்துள்ளனர்.**

முருக பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான, திருச்செந்தூர் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது. முருகன் சூரபத்மனை வதம் செய்த இடம், தெய்வானையுடன் திருமணம் நடைபெற்ற இடம், அறுபடை வீடுகளில் நிலப்பரப்பில் அமைந்திருக்கும் கடற்கரை சார்ந்த தலம் என பல சிறப்புகளை திருச்செந்தூர் பெற்றுள்ளது. இந்த முருகன் கோவிலுக்கு தினசரி உள்ளூர், வெளியூர், வெளிநாடுகளில் இருந்து பக்தர்கள் வருகை தந்து தங்கி சாமி தரிசனம் செய்து நேர்த்திக்கடன் செலுத்தி வழிபடுகின்றனர்.

இதனிடையே ஜோதிடர் ஒருவர் சொன்னதாக சமூக வலைத்தளங்களில் பரவிய தகவலால் ஒவ்வொரு மாதமும் பவுர்ணமி நாளில் இரவில் திருச்செந்தூர் கடற்கரையில் நிலவொளியில் தங்கி மறுநாள் அதிகாலை புனித நீராடி சாமி தரிசனம் செய்தால் வாழ்க்கையில் மிகப்பெரிய பலன்கள் கிடைக்கும் என பக்தர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இதனால் ஒவ்வொரு மாதமும் பவுர்ணமி நாளில் கால் வைக்க கூட இடமில்லாத அளவுக்கு கடற்கரையில் மக்கள் திரண்டு வருகின்றனர்.

இந்நிலையில், சமீப காலமாக கோவில் முன்பு தங்கும் பக்தர்களிடம் அதிக அளவில் திருட்டு நடைபெறுவதும் பொருட்கள் காணாமல் போவதும் போன்ற சம்பவங்கள் நடந்து வருகிறது. எனவே பக்தர்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், கோவில் நிர்வாகம் நடவடிக்கையை எடுத்துள்ளது. அதன்படி இன்று முதல் கடற்கரை பகுதியில் யாரும் இரவு நேரங்களில் தங்க அனுமதி இல்லை என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து கோவில் கடற்கரை பகுதியில் தரிசனத்திற்காக குடும்பத்துடன் தங்கி இருக்கும் பக்தர்களை திருக்கோவில் பணியாளர்கள், காவல்துறையினர்கள் கடலோர பாதுகாப்பு குழுவினர்கள் ஆகியோர், அப்புறப்படுத்தினர். இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை கோவில் முன்புள்ள கடற்கரையில் தங்க அனுமதி இல்லை என ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தப்பட்டது.

### அய்யா கோவில் வரை

அதன்படி திருக்கோவில் முன்புள்ள கடற்கரை பகுதியில் இருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ள அய்யா கோவில் வரை உள்ள கடற்கரை பகுதியில் பக்தர்கள் யாரும் இல்லாதவாறு கடலோர பாதுகாப்பு குழுவினர்கள் மற்றும் கோவில் பணியாளர்கள் ஆகியோர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு தற்பொழுது அவர்களுக்கு அறிவுரை வழங்கி கோவில் வளாகங்களில் மற்றும் அங்குள்ள மண்டபங்களில் தங்கிக் கொள்ளுமாறும் கூறி அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

# தெலுங்கானா முதலமைச்சர் பிறந்தநாள்: ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, நவ.8–

தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் அனுமுலாவின் பிறந்தநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:–

'தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் அனுமுலாவுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.

அவர் மகிழ்ச்சியோடும், நல்ல உடல்நலத்தோடும் இன்னும் பல்லாண்டுகள் மக்கள் பணியில் ஈடுபட்டுச் சிறந்திட விழைகிறேன்' என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# அத்வானி பிறந்தநாள்: பிரதமர் மோடி வாழ்த்து

புதுடெல்லி, நவ. 8–

இன்று பாரதீய ஜனதா கட்சியின் (பா.ஜ.க.) மூத்த தலைவரும் முன்னாள் துணைப் பிரதமருமான எல்.கே.அத்வானியின் 98வது பிறந்தநாள். இதை முன்னிட்டு பிரதமர் மோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:–

''எல்.கே.அத்வானிஜி–க்கு பிறந்தநாள் வாழ்த்துகள். உயர்ந்த தொலைநோக்குப் பார்வையும் அறிவுத்திறனும் கொண்ட ஒரு அரசியல்வாதியான அத்வானிஜியின் வாழ்க்கை இந்தியாவின் முன்னேற்றத்தை வலுப்படுத்த அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அவர் எப்போதும் தன்னலமற்ற கடமை உணர்வையும், உறுதியான கொள்கைகளையும் கொண்டுள்ளார். அவரது பங்களிப்புகள் இந்தியாவின் ஜனநாயக மற்றும் கலாச்சார நிலப்பரப்பில் ஒரு அழியாத முத்திரையை பதித்துள்ளன. அவர் நல்ல ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ வாழ்த்துகள்''.

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# தூய்மை பணியாளர்கள் போராட்டம்: சென்னை மாநகராட்சி முன்பு போலீசார் குவிப்பு

சென்னை, நவ. 8–

தூய்மை பணியாளர்கள் போராட்டத்தையொட்டி சென்னை மாநகராட்சி முன்பு போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகராட்சியின் 5, 6 மண்டலங்களின் தூய்மைப் பணியை தனியார்மயமாக்குவதை கண்டித்தும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 90 நாட்களுக்கு மேலாக ரிப்பன் மாளிகை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தூய்மைப் பணியாளர்கள் தொடர் போராட்டத்தை நடத்தி தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். இந்த விவகாரம் தொடர்பாக, ஏற்கெனவே அமைச்சர்கள், மேயர், மாநகராட்சி ஆணையர் உள்ளிட்டோர் பல கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தியும் அனைத்து பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிந்துள்ளன.

தூய்மைப் பணியாளர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் காவல் துறையினரால் கடந்த ஆகஸ்ட் 13ந்தேதி நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து சென்னையில் அவ்வப்போது வெவ்வேறு இடங்களில் தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். பின்னர் அவர்கள் காவல் துறையால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

கடந்த 5ந்தேதி மெரினா கடற்கரையில் கண்ணகி சிலை பின்புறம் கடலில் இறங்கி தூய்மை பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடல் அலையில் இறங்கி கையில் பதாகைகளை ஏந்தி ஆபத்தான வகையில் தங்களுடைய போராட்டத்தை நடத்தினர்.

இந்நிலையில் தூய்மை பணியாளர்களின் போராட்டம் 100 வது நாளை எட்டியுள்ளதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் மாளிகை முன் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, No.1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600024 on behalf of M/s. Newsmen Associates Private Limited. நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733910, E-mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு இ–மெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction. This Edition Covers: Chennai, Thiruvallur, Chengalpattu, Kancheepuram, Villupuram, Kallakurichi, Tiruvannamalai, Cuddalore, Vellore, Tirupathur, Ranipet Districts, Puducherry State, Parts of Andhra Pradesh, Kerala, Karnataka, Maharastra and New Delhi.